செய்தி வெளியீடு எண்:724 நாள்: 28.10.2017

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.10.2017 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள தஞ்சாவூர் புறவழிச்சாலையின் இரண்டாம் கட்டப் பகுதியை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள ஒரு இரயில்வே மேம்பாலம் மற்றும் ஒரு ஆற்றுப்பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி மிகமுக்கிய பங்கினை வகிக்கிறது. சாலைக் கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தேவைக்கேற்ப மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தஞ்சாவூர் நகரில் போக்குவரத்து நெருக்கடியை தீர்க்கும் நோக்கில், 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.2 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இரு வழித்தட தஞ்சாவூர் புறவழிச்சாலையின் இரண்டாம் கட்டப் பகுதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இதன்மூலம், தஞ்சாவூர் நகருக்கான சுற்றுச்சாலை முழுவதுமாக நிறைவு பெற்றுள்ளது.

இப்புதிய புறவழிச்சாலை பயன்பாட்டிற்கு வருவதால், தஞ்சாவூர் நகரில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களிலிருந்து தஞ்சாவூர் வழியாக மாநிலத்தின் பிற இடங்களுக்கு செல்லும் கனரக வாகனங்களின் பயணதூரம் மற்றும் பயணநேரம் வெகுவாக குறையும்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தஞ்சாவூர் புறவழிச்சாலையில் ஆலக்குடியில் 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம்;

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், திருவெண்ணைநல்லூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மலட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம்;

என மொத்தம் 73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒரு புறவழிச்சாலை, ஒரு இரயில்வே மேம்பாலம் மற்றும் ஒரு ஆற்றுப்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திரு.ரெ.கோதண்டராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 28.10.2017**